**தமிழ்நாடு அரசு**

**இந்து சமய அறநிலையத்துறை**

**உதவி ஆணையர் அலுவலகம்**

**விருதுநகர்**

ந.க.எண்.2417/2010/அ2 நாள்: 27.07.2021

# வேலை வாய்ப்பு அறிவிக்கை

விருதுநகர் மாவட்டம், இந்து சமய அறநிலையத்துறை, விருதுநகர் உதவி ஆணையர் அலுவலகத்தில் நாளது தேதியில் காலியாக உள்ள ஒரு ஊர்தி ஓட்டுநர் பணியிடத்திற்கு கீழ்கண்ட விபரப்படி இந்து சமயத்தை சார்ந்த தகுதியான நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவ்வாறு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்களின் பெயர், பிறந்த தேதி மற்றும் வயது, கல்வி தகுதி, இனம் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட / மிக பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்) மற்றும் முன்னுரிமை பெற்ற விபரம் ஆகியவற்றை குறிப்பிட்டு அதற்கான சான்றொப்பமிட்ட நகல்களுடன் 06.09.2021 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் பின்வரும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். காலதாமதமாக வரும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்து தனியே கடிதம் மூலமாக (Call Leter) தகவல் தெரிவிக்கப்படும்.

| வ எண் | இனச்சுழற்சி விபரம் | ஊர்தி ஓட்டுநர் காலிப்பணி இடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) General Turn Priority (GTGL) | 1 | நிலை-8, தளம் 1 19500-62000 | 1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8ம் வகுப்பு தேர்ச்சி அதற்கு இணையான தகுதி<br>2. இலகுரக அல்லது கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்<br>3. முதலுதவி பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்<br>4. மூன்று வருடத்திற்கு குறையாத ஓட்டுநர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் |

## நிபந்தனைகள்:-

1. இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் சட்டம் 1959-இன்படி இந்து சமயத்தை சார்ந்த நபர்கள் மட்டுமே இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவர்.
2. பொதுப்போட்டி இனத்தவர்களுக்கு 01.07.2021 ஆம் தேதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
3. பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களுக்கு 01.07.2021 ஆம் தேதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 32 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். பட்டியல் இனத்தவர்களுக்கு 01.07.2021 ஆம் தேதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர்கள் அதற்குரிய ஆவண நகல்களைக் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். உரிய ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில் வயது வரம்பில் சலுகை கிடையாது.
5. விண்ணப்பதாரர்கள் ஏனைய விவரங்களை உதவி ஆணையர் அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
18, நாச்சி தெரு, விருநகர் 626001
தொலைபேசி எண் 04562 - 294607

வெ.ஆ.எண்: 92/செ.ம.தொ.அ/விருதுநகர்
நாள்: 6.8.2021

ச.கணேசன்
உதவி ஆணையர்